416

உ

முருகன் துணை

P. R. C. SERIES. 11 2000 காப்பிகள்

இத்துல்தான் கவாய் K. T. நடராஜம்பிள்ளை T.M. காதர் பாக்ஷா சாயபு T. M. மருதப்பா சிதம்பரநாதன் முதலியோர்கள் பாடிவரும் வர்ண மெட்டுகள் அமைந்த

அதியற்புதானந்த கீர்த்தனைகள்,

சிதம்பரம்

N. வேலுமேனன் அவர்களால்

இயற்றப்பட்டது.

OFFICE OF THE REG... OF ... MADRAS
16 JAN 1930

புதிய பாடல்கள் அடங்கிய

[இரண்டாம் பதிப்பு]

பிரசுரிப்பவர்கள்.
ஸ்ரீ வாணிவிலாச புஸ்தகசாலை
திருப்பாதிரிப்புலியூர்.

[...ஜிஸ்டர்] [விலை அணு 2

1929

(826.4...)
N29.

புஸ்தக ஆர்டருக்கு காலண்டர் இனாம் !!

காதல் சுவை ததும்பிய நாவல்கள்.

மதனசிங்கர்	1—0—0	மர்மமுகி	0–12—0
சுந்தரவதனி	0–12—0	பவளப்பதுமை	1—4—0
ராதாமணி	2—8—0	லக்ஷ்மிகாந்தன்	2—0—0
பத்மசுந்தரன்	2—8—0	ஜடாவல்லவர்	2—8—0
வைதேகி	2—8—0	காந்திமதி	2—0—0
கௌரீமுகுந்தன்	1–12—0	பச்சைமோதிரமர்மம்	1—0—0
சண்பகவிஜயம்	1–12—0	தருமசீலன்	1—0—0
ஜெகதீசன்	1–12—0	தர்மாம்பாள்	1–12—0
மங்களபூஷணம்	1—4—0	தலைவாங்கிய தனுக்கு சுந்தரி	1—0—0
சவுடால்சம்பந்தம்	1—0—0		
கர்பகசுந்தரி	2–12—0	அங்கயர்கண்ணி	1–12—0
கனகபுரி	1—8—0	காதலால் கொலை	1—8—0

இவைகளில் எதை விரும்புகிறீர்கள்?

இல்வாழ்க்கைக் கிரமரகசியம்	3—0—0
இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்	2—0—0
இல்வாழ்க்கையின் இரகசியங்கள்	2—0—0
இல்லறவாழ்க்கையின் மதனரதி இன்பரகசியம்	1—8—0
சதிபதிமர்மம்	1—0—0
ஆண்பெண் மர்மம்	1—0—0
சிற்றின்ப ஞானசிந்தாமணி or மானிடமர்ம [பொக்கிஷம்	1—0—0
ஸ்திரி புருஷ சமத்துவம்	1—0—0
ரதிமதனசிங்கார ரகசியம்	0–12—0
விறலிவிடுதூது	0–12—0
மனோவசிய சாஸ்திரம்	1—8—0
ரகசியசாஸ்திர சிந்தாமணி	0—8—0

ஸ்ரீ வாணிவிலாச புஸ்தகசாலை,

79, சுப்புராயசெட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

ஆரேசையான்— என்ற மெட்டு

பல்லவி.

கணநாதா கரியின் முகவேதா
காராயெமை நீதா

அநுபல்லவி.

தேவனே உனை துதிசெய்திட்டோம்
எங்களைவிரைவினில் காருமையா

சரணம்.

என்றும்போல இன்றும் பாடுகின்றோம்
குன்றமனதாலே கோருகின்றோம்
வந்திடும் இந்தவேளை
தந்திடும் உந்தன் தாளை
தமிழ் மதுரம் கமழ்ந்திடவே
கவலை யெலாம் ஒழிந்திடவே (க)

வா வா கார்த்திகா—என்ற மெட்டு.

வா வா அம்பிகா
வரமது இனிதருள இதுததி மகிழ்வொடு (வா
ஆண்டருள் தாயே
வேண்டினேன் சேயே
விரும்பும் வரம்பெற
புகழ்ந்திடுவோம் தினம்
மகிழ்ந்தருளும் மனம் (வா)

செந்தமிழ் வேலன் கவியனுகூலன்

OFFICE OF THE REG... 16 JAN 1930 MADRAS

180501
சென்னை-600 008.

சேவித்துனை பணிந்தேன் கனிவுடன் வரமதருள
இனிதுடன் எனது முன்னம் (வா)

சூழ்ந்துசக்கர்—என்ற மெட்டு.

R>8:417

விரைந்து வரந்தருகுவீர் வேலாயுதா நீர்
சீலனே யுமைபாலனே எனைகார்க்க இங்கு வா வா வா
கானில்குற வள்ளியைத்தேடி மணந்தாய்
வாதென்மீ தினிதகாது வந்தென்னை நீ கார் கார் கார்
சூரரை சம் ஹரித்ததீரா சோதனையேனோ
சுருதிசாற்றும் சுப்ரமண்யா சுந்தராவடி வேல் வேல் வேல்
கண்டிகதிர்காமமேவும் கார்த்திகா தீரா
ஆண்டருள் செய் அடியேனெனை ஆதரிக்க வா வா வா
கந்தனேஉன் சன்னதியை கண்டாலானந்தம்
காக்ஷிதந்து மாக்ஷியுடன் கர்த்தனெனை கார் கார் கார்
தாசன் வேலன் பதம் பாடி போற்றினேன் ஐய்யா
தாரணியோர் புகழுங்கந்தா தருணமிது வா வா வா

வள்ளிநாயகனே—என்ற மெட்டு

வேதநாயகனே—உனை
வேண்டும் அன்பர்களை ஆண்டருள் செய்குவாய்

அநுபல்லவி

தினமுமுனது பதமலரிணை
மனமகிழ்ந்து துதிபுரிந்தோம் (வே)
விரைவினிலிங்கு வருகவேளே
முருகனே பணிந்தோம் தானே (வே)

வேலா சீலா கோலாகலா
பாலனுக்கருளும் லோலா (வே)

திடமுடன் பதமலரிணையது
நடனமயிலுடன் வாமுறையது (வே)

சரணம்

கண்டிகதிர்காம மேவிடுங்கந்தனே
அண்டின பக்தரை ஆதரி சொந்தனே
சண்டியான யுமையாளருள் மைந்தனே
சரணம் புகுந்தோம் இதுததி
மனமகிழ்ந்து செய்தோம் துதி (வே)

சிந்தை நைந்துருகி மைந்தன் பணிந்தேனே
கந்தா வரந்தா இன்னும் ஜாலமேனோ
வந்தா தரித்திட வேளை இதுதானோ
அன்புடனே பாலன் வேலன்
இடமணுகிட வாருஞ்சீலா (வே)

சூரர்குலவேரறுக்க—என்ற மெட்டு.

காரணப்ரணவ ரூபமறிந்தோனே—கரி
நாரணற்கு மருகனைப்பிரிந்தோனே—அந்த
சாம்பவன் உய்திடதீம்பதம் ஓதிட
மேம்பத மேயுமையாம் பணிந்தோம்வர (கா)

சூரன் உரங்கொண்டு உமைதடுத்தானே
அந்தந்த்ரகிர உஞ்சல்மாய்கை விடுத்தோனே-அந்த

மாயப்பதர்பால் சாயச்சிலேவேல்
மாயத்தரைமேல் எயத்தருவேல் (கா)

குருமுனித்தனக்குத் தமிழ்கொடுத்தோனே
சிறுகோதை வள்ளிசிக்க யானைவிடுத்தோனே
யான் வாவாவென்று வேண்டுரேன் உன்னை
காவா என்னை கரிமால் மருகா (கா)

பசியகண்கள் பன்னிரண்டால் பார்ப்பீரே
இப்பாலன் வேலன் பதத்திற்செவிசாய்ப்பீரே
பதம்பாடியே வாநாடியே சூரர்
தேடியே பொருளோடியே வா (கா)

சரி சரி—என்ற மெட்டு.

வேலனே மாமயில் மீதமர் வடி (வே)

அநுபல்லவி

தினமேமனக் கணிவாயுனை
பணிந்தேனெனை கார் நீ தனே (வே)

சரணம்

அன்றமருந்து திக்க சென்றமர் பொருதவா
தண்டமிழ் ஒளிக்கடலே என்றும் நான் கருதவா
வெந்துமாளவோ துதி
தந்து ஆள வா
வேடக்குற வள்ளிதனை
தேடி மணம் புரிந்தவனே (வே)

(தொகையறு)

ஆதியும் அந்தமாய் அமர்ந்த ஈசா
அடியேன் எனக்கோர் வரம் அருளும் சர்வேசா

செந்தமிழின் தாசன் வேலன் இன்ப பதம் பாடினேன்
செந்தின்மாநகரில் வாழும் கந்தனே உனைநாடினேன்
கார்த்திகா தீரா—அருள்
பூர்த்திதா நேராய்
வாராய் இங்கு சீராய் வரம்
தாராய் எனை காராய் வடி (வே

மதனஒய்யாரா—என்ற மெட்டு.

மாமயிலவனே வள்ளி மனமகிழ்பவனே
வாருமெந்தனை காருமே வரம்
தாருமிங்கு நீர் கூறும் சிந்தனை (மா)

கார்த்திடுமீசா கண்பார் சர்வேசா
கரங்குவித்துனை தினந் துதித்தேனே
மனமகிழ்ந்தெனை கனிவுடன் தானே (மா)

சத்துர் சங்கரா அடியார் சாற்றுமுபகாரா
சாமியுனை தினம் மேவி பணிந்தேனே
நேமியெந்தனிடம் தாவிவருங்கோனே (மா)

கார்த்தருள் வேலா கருணைபுரியுமைபாலா
ஆசைமிகுந்திடும் தாசன் வேலன்பதம்
நேசமுடன் இங்கு ஓதினேனே தினம் (மா)

மயிலேரிவருவாய்—என்ற மெட்டு

விரைவினில் வருவாய் வள்ளிகாதனே
அருள் போதனே (வி)
வேண்டினேன் உனை நானே ஆண்டருள் செந்தூர்கோனே
ஆறுமுக வடிவேலோனே (வி)

சந்ததமுந்தன் பாதம் பணிந்தேன் நீயேசதம்
கருணைபுரிந்து என்னை காப்பீர் நிதம் (வி)

மாமயில் மீதில் வாசன் மாமலர் சூழும் நேசன்
மாதுக்குற வள்ளியின் விஸ்வாசன் (வி)

நேசமிகு தாசன் வேலன் நேர்மைகவியனுகூலன்
நேர்மையுடன் உந்தன் பாதம் பணிந்தேனே (வி)

களிக்கபூமகள் நாரணன்—என்ற மெட்டு

துடிக்கும் மயின்மேல் களிக்க எந்தன்முன்
காக்ஷி தந்தருள் வேலா
மாக்ஷிமை தங்கிய சீலா (து)

அநுபல்லவி

துதிக்கும் பாலனை கார்த்தருள் கோனே
துதிக்கையுடையவனின் இளையோனே
துயர் தவிர்த்திட வாருஞ்சீமானே
வேண்டினேன் உந்தனையானே
ஆண்டருள் செந்தூர்கோனே (து)

கந்தா உந்தன் பதமலரிணை கருத்தில் தினம் தாக்கிடவே
சந்ததமுன் அருளொளிக்கண் தமியேனெந்தனை நோக்கிட
சாறும்மாய்கையதை தரித்திடாமல் போக்கிடவே [வே
சீலமுடன் சிறு
பாலன் வேலாயுதம்
சாற்றிய பாடலை கேளும்—உமை
போற்றினேனெந்தனையாளும் (து)

மங்கையர்—என்ற மெட்டு

மாமயில் மீதமர்ந்திடும் மாதுமையாள் பாலா
மாண்புடன் உன்னை வேண்டினேன் என்னை
ஆண்டருள் வேலா
தில்லைதாண்டவன் பாலா
அருள்புரிந்திடும் சீலா லோலா (மா)

பார்புகழ் பஞ்சாமிர்த பாலாபிஷேகனே
பண்புடன் எந்தன் துன்பந்தீரா
வந்தருள் வீரா
எனைக்காருமுபகாரா
அருள் கார்த்திகா திகாதீரா ஒய்யாரா (மா

செந்தின்மா நகர்வாழும் கந்தனே இங்குவா
காக்ஷிதந்தெனை மாக்ஷீமையுடன்
காரா அலங்காரா
அதிதீரா
சிங்காரா ஒய்யாரா (மா)

செந்தமிழ் தாசன் வேலன் நீம்பதம் போற்றினேன்
தீர்த்திடும் துயர் பார்த்திடும் கண்
கார்த்திட வாராய்
அருள் கூறாய்
வெகு சீராய் நேராய் (மா)

அம்பிகை பாலனே—என்ற மெட்டு

பார்வதிபாலனே பார்புகழ் வேலனே
வாராய் வரந்தாராய் எனைகாராய்

அநுபல்லவி

ஆண்டருள் வேலா
தாண்டவன் பாலா
வேண்டினேன் சீலா
திடமுடன் நடமயிலுடன் இங்கு (வா)

(தொகையறு)

கந்தாகழுகாசலம் மேவுங்கருணைக் கடலே
மைந்தனென்னை வந்தாதரித்தருளே

சரணம்

குறக்குல வள்ளி மகிழ் குன்றக்குடிவேலனே
குறைமிகுந்திடும் தாசன் வேலன் குறைதவிர்ப்பாய்சிலனே
ஐயனே அருள் மெய்யனே விரைவிலிங்கு (வா)

ஸுஜனஜீவனு என்ற—மெட்டு

சுந்தராவேலா இங்கு வந்தருள் சீலா கோலர் (சு)
கந்தநாதனே வரந்தந்தருள் கோனே
சந்ததமுன் பதமலரிணை சாற்றினேன் நானே (சு)
தக்கன் தவமழித்ததீரா
சாரும் உப காரா
மிக்கவே உனைபணிந்தேன்
கார் அலங்காரா
வேலனின் பதம் பாடிகோலனே சதம்
என்றெண்ணினேன் சற்றெந்தெந்தனை காராயோ சீலா

தசரத ராஜகுமாரா—என்ற மெட்டு

மாதுமையா ளருள் பாலா வள்ளி லோலா
அருள்சீலா கோலாகலா
அனுதினமுன திரு பதமலரிணையே
பணிந்தேன் உனையன்றி வேறில்லை துணையே
கரங்குவித்தேனுமை காருமெந்தனையே
கடுகியேஎந்தன்முன்னே வாராய் வரந்தாராய்
எனைக்காராய் வெகுசீராய்

கழுகாசலமேவிடும் நாதா இன்னும் வாதா
அருள் போதா குணநீதா
வள்ளிதெய்வானையுடன் கொஞ்சிடும்தீரா
கள்ளமேனெஞ்சில் காரலங்காரா
விள்ள ஆக துயர் விலக்கிடும் சீராய்
விரைவினில் வந்தெனை காரய்யா முருகையா
அருள்துய்யா பன்னிருகையா

விகசிதமயிலமர்-தேவா-இங்கு வாவா-வரந்தாவா-எனைகாவா
பாலன்வேலன் பதம் சாற்றினேன் நானே
சீலமுடன் உன்னை போற்றினேன் கோனே
கோலாகலமயின்மீ தேறியே தானே
குணமுடனெனக்கருள் தாரும் இங்கு வாரும்
என்னைகாரும் வினை தீரும்

ஆனந்த சோபன கல்யாணமே முகூர்த்தம்—என்றமெட்டு

ஓடி மயின்மீதமர்ந்திங்கு வருவீர்—வரந்தருவீர்
வேலவனே உனைவேண்டினேன் நானே
கோலாகல வள்ளிமகிழுங் கோமானே (ஓ)

(தொகையறு)

அடியவர் படும் துயரங்கண்டும் காணாதவன்
போலிருப்பது முறையோ
கடிதினில் வந்தருள் புரிந்தால் உன் பெருமை
தனக்கு குறையோ

மாதுக்குறவள்ளி மகிழ்ந்திடும் நேசா—அருள் விஸ்வாசா
நேசமுடன் உன்னை தாசன் பணிந்தேனே
பாசமிகு குன்ற வாசா செந்திற்கோனே (ஓ)

(தொகையறு)

சிகை மீதமர்ந்து தேசுலாவும்
கர்த்தனே வாராய்
பெருந்தகையோனே உன்மேலவா
வுறுந்தமியோனை காராய்

பக்தியுடன் பாடும் பாலனெனனைக்காரும்-பக்ஷமுடன் நீரும்
சித்தமகிழ்ந்துனை நத்திவந்தேனே
பக்தர்க்கருள்புரி கர்த்தனெனுங்கோனே (ஓ)

(தொகையறு)

பாலுடன் தேனும் பஞ்சாமுர்த
அபிஷேக வீரா
பாலன் வேலன் பதம் போற்றும்
கழுமலையமர்ந்த கெம்பீரா

நடன மயின்மீதமர்ந்திடும் வேலா—தடையேனோ சீலா
கர்த்தனே உன்னை நித்தம் பணிந்தேன்
சித்த மகிழ்ந்தெனை இத்தருதி காத்தருள் (ஓ)

18050
சென்னை-600 008.

லோகமான்ய பால கேங்காதர—என்ற மெட்டு

பார்வதிபெற்ற திருத்தணிவடி வேலா
பாலனெனைக் கண்பார்த்தருள் சீலா
கோலகலவள்ளி மகிழ்ந்திடும் லீலா
குறைதவிர்த்திட வந்தருள் லோலா

(தொகையரு)

கலியுகத் தெய்வமெனக் கருதி
உனைப்பணிந்தேன் ஐய்யனே
கானினில் கள்ளகஜமாயுனக்
குதவிய கஜமுகன்னிளையனே

சிகை மிசை நடமிடு தேசிகநாதா
சிறுவனென்குறை செவியிலேறுதா

(தொகையரு)

மாய்கை சூழும் ப்ரபஞ்சமீது பாலன் படுந்துயர் கொஞ்சமா
பேய்கள்வாழும் மயானம் சுற்றுமீசன் மைந்தனே இன்னும்
[வஞ்சமா

பகவதியாள் உமை சாம்பவிசுதனே
பக்தன் வேல்தாசன் பணியுங்குமரனே

வா கூர்வேலேந்துங்கையனே—என்ற மெட்டு

வா வனவள்ளி மகிழ்பவா
கன புள்ளி மயில் மீது அமர்ந்திங்கு (வா)

அநுபல்லவி.

மால்மருகா உனை தினமுந்துதித்தோம்
மாவினை வந்தணுகாமலே
தீருமே திருச்செந்தூரனே (வா)

சரணம்

கந்தனே உந்தனை மைந்தர்கள் துதித்தோம்
சொந்தமாய் உன்பதம் மனதிற் பதித்தோம்
சிந்தையிலுன்கழல் துணையென மதித்தோம்
கர்த்தனே உந்தனை யாவரும்
நித்தமுதுதி செய்தோம் காரும் (வா)

துன்பம் விளைத்திட்ட அசுரரைக்கொன்றுமே
இன்பமாய் காத்திட்டாய் அமரரை அன்றுமே
அன்புடன் எனக்கருள் தந்தருள் இன்றுமே
நடன மயிலுடன் இதுததி
நளினபதமலரிணை தந்திட (வா)

தக்கோர்க்கருள் புரிந்தாட்கொள்ளுந்தீரனே
தக்கன் தவமழித்தோனின் குமாரனே
இக்கணம் வேலன் பதத்தின் சிங்காரனே
இடரதை தவிர்த்தெனக்கருள்புரி
திடமுடனேகார் எனை ததி (வா)

அந்தமிகுந்திடும் நந்தவனப்பெருமை—என்ற மெட்டு

சுந்தரா உனை மைந்தன்யான் பணிந்தேன்
இனி தடையின்றி உந்தனருள்
கடையன்யான் பெற உய்தோன் (சு)

சரணம்

அந்தரத்தமரர்கட்கு வந்த குறை தவிர்த்திட்ட
கந்தனே மனமகிழ்ந்து வாராய்
கார்த்திகேயா உன்னையன்றி எந்தனுக்காருகூறு
வந்துஎன்னைகாரு நேரேவந்தவினை தீரும் நீரே (சு)

ஆயர்குலமாயனுக்கு நேயமுள்ள மருகனே
அபயமளித்து எனைக்காராய்
சீலமுடன் உந்தன் பாதம் பாலன்யான் துதிபுரிந்தேன்
கோலமயில் மீதமர்ந்து சீலனே எனைக்கண்பாராய் (சு)

குட்டிபிரமனை சிறையிட்டு உந்தன் தந்தையற்கு
மந்திரம் உபதேசித்ததீரா
கிட்டிவந்தருள்புரிய திடமுடன் இங்கு வாரும்
உற்றதுணையற்ற வேலன் பாடலுக்குகந்து நீரும் (சு)

பாகமிரு கோதையரை—என்ற மெட்டு

சுந்தரனே கந்தநாதா வந்தருள் செய்குவாய்
சுருதிசாற்றும் வேலாயுதா
சுருதிபோற்றும் தெண்டாயுதா (சு)

பக்தனெக்கருள் புரிந்திட
மிக்கவேபுனை பணிந்தேன் (சு)

அநுபல்லவி

மறைமுனி புகழ் மாதவனே திகழ்
மாசிலாத சீலனே யருள்
கோலாகல வேலனே யென் (சு)

சரணம்.

பந்த பாசவலே பட்டுழன்று நானே
பாங்கறியா புல்லறிவான ஞனேனே
தீங்கணுகாமல் காத்திட தானே
தீங்கனிமானே யொத்த செழுந்தேனே
கதிகலங்கிடு மடியவனெனை
ததிவந்தருள் புரிந்திடுங்கோனே
பதிபழனுபுரியானேனே
மாதுமையருளும் பாலனே
சந்தததாசன் வேலனின்
செந்தமிழ் பாடும் இம்மேதினி (சு)

சோமசுந்தரனே—என்ற மெட்டு
செந்திலாண்டவனே— செஞ்
சேவற்றேவும் மாசற்றேனே (செந்)

சரணம்

பழனுபுரி யுறையும்போதா
பக்தன் என்மேல் இன்னும் வாதா
கருதினேன் காரும் நீதா
கந்தனே இங்கு வந்தருள் செய் (செந்)

பந்தபாச மிஞ்சுதைய்யா
எந்தநாளில் ஒழிப்பதைய்யா
செந்தமிழ் வேலன் போற்றுமெய்யா
வேண்டினேனே ஆண்டருள் செய் (செந்)

கண்டாலானந்தமே—என்ற மெட்டு

கந்தா உந்தன் பாதமே — கருதிதுதிசெய்தோமே
சந்ததமுந்தனின் பாதம் மைந்தர்கள் பணிந்தோம் நிதம் (க)

மாண்புடைய நற்பொருளை யளித்திடும் தெய்வமே
மாமுருகா உனையன்றி யாங்களெங்கு உய்வமே
மணங்கமிழ் மலர்க்கொண்டு நாங்கள் தொண்டுசெய்வோமே
மாக்ஷீயுடன் காக்ஷியில்லால் யாங்கள் இங்கு மாய்வோமே
பக்தரிடம் இத்ததிநீர் வாரும்
விரைவில் — சித்தமகிழ்ந்தெங்களையே காரும்
சிறு — வித்வன் வேலன் பதத்திற்கருள் கூறும்
தேவ—கர்த்தனே வல்வினையதை தீரும்
உமை பணிந்தேன் வேலா
உமையாளருள் பாலா
சமயமனு கூலா
அபயமருள் சீலா சுந்தர (கந்)

ஸ்ரீராமபாதமா—என்ற மெட்டு

மாதுமை மைந்தனே மாதவன் சொந்தனே
மா மு ரு கோ னே (மா)

வள்ளியின் நாதா வரமருள் போதா
வாதென்மீ-தினிதகாது வேத கீத போதனே (மா)

தாரணிதனிலே வேலணிந்தோனே
வீரனெனப்புகழ் விளங்கிடுங்கோனே
பாலன் வேலன் பதம் பாடினேன் நான் நிதம்
பக்தனெனை ரக்ஷிக்கவே இத்ததி நீர் வாருமே (மா)

186501
26:417
No7

தாளவும் வசமா—என்ற மெட்டு

இதுவும் தர்மமா இன்னும் வர்மமா—குறைதவிர்த்திட (

அநுபல்லவி

கேளாய் நான் நெடுநாளாய்
உந்தனை வேலா பணிகிறேன் (இது)

சரணம்

கருணையைப்பனே கருணை செய்பவே
சுதனுன் மாயப்புலியில் உப்பவே
தீரா தென் புலியூரா எந்தனை
காரா விடில் மடிகுவேன் (இது)

வள்ளி தெய்வானை மகிழ்ந்திடும் யோகனே
துள்ளி மயில்மீது அமர்ந்திடும் வாகனே
வாராய் இங்கு நீர் சீராய் எந்தனை
காராய் விரைவினில் (இது)

பன்னிருகையனே பாலாபிஷேகனே
பாங்கருள் தென்பரங்குன்றின் விஷேஷனே
சீலா மாதுமை பாலா மாதவ
லோலா ஆண்டருள் (இது)

கரங்குவித்துனை தினந்துதித்தேனே
பரனுர்மன மகிழும் செந்தேனே
ஐய்யா எனக்கருள் மெய்யா
பன்னிரு கைய்யா வந்தருள் (இது)

சோலப்பரங்குன்றில் விளங்கிடுங்கோனே
வேலன் பதத்திற் கருளிடும்சிமானே
ஆயர்குலத்தின் மாயன் மருகா
நேய முடன் கார் (இது)

ஸ்ரீ-ஷண்முகா பிரிண்டிங் ஒர்க்ஸ், திருப்பாதிரிப்புலியூர்

மதனசிங்கர்

அல்லது

உரிமை இழந்த சீமான்.

ஒரு சீமான் தமது உரிமையை இழக்க நேரிட்டதெப்படி என் இழந்தார்? பிறகு என்ன செய்தார்? கதா நாயகனின் அனுபவங்களை அறிய நீங்கள் ஆசை கொள்ளவில்லையா? கதையின் இன்பகரமான முடிவை அறிவது அவசியமென உங்களுக்குத் தோற்றவில்லையா? ஆகவே ஆனந்தமுமடைய இதனை வாங்கி வாசியுங்கள். இருபத்தைந்து அழகிய அத்தியாயங்களைக்கொண்டது ஒவ்வொரு அத்தியாயமும் படிப்பவர் மனது கருங்கல்லையொத்ததாயிருப்பினும் அதை பாகுபோல் கரையச்செய்யுமெனபது நிச்சயம். விலை ரூ. 1-0-0

புதியநாவல்! ஓர் இனிய துப்பறியும் நாவல்!!

சுந்தரவதனி

அல்லது

தருமமே ஜெயமளிக்கும்

ஜமீன்தார் வீரஸிம்ஹர் தமது குமாரத்தியான சுந்தரவதனிக்கு தமது ஜமீனை உரிமையாக்கி உயில் எழுதி வைப்பதும், அதைத்தேடி எடுக்க சில பாதகர்கள் முயல்வதும், அவர்களைப் பின் தொடர்ந்து துப்பறிபவராகிய கஜபதிசிங் சென்று, கடைசியில் சந்நியாசி வேடத்துடன் யாவற்றையும் கண்டுபிடித்தும், துப்பறிபவரே சுந்தரவதனியின் கணவராக முடிவில் அமைவதும் வாசிக்க வாசிக்க மிக்க இன்பமே வியப்பான சூட்சிகள் இதன் கண் நிறைந்துள்ளது. விலை அணா 12.

புதிய நாவல்!	இனிய நாவல்!
ஸ்திரீமாச்சரியம்	[illegible]
என்னும்	தளுக்கு சுந்தரி
துர்க்கி கதைகள்	அதிவிநோத அழகிய நாவல்
விலை ரூ. 1—8—0	விலை ரூ. 1—0—0

விலாசம்:—ஸ்ரீ வாணி விலாச புஸ்தகசாலை,

திருப்பாதிரிப்புலியூர்.

விலைசரசம்! விற்பனைக்கு தயார்!

புஸ்தக ஆர்டருக்கு 1929-ம் வருஷத்திய காலண்டர் இரும் மர்மங்களை வெளியாக்கி விபரீத செயல்கள் பல புரிந்து வந்த துர்ச்சனனை தும்சஞ்செய்த துப்பறியும் சிங்கத்தின் தீரச்செயலை உண்மையாய் உணரவேண்டுமோனால்?

வாங்குங்கள்! படியுங்கள்!! படித்து களி கூறுங்கள்!!!

மர்மமுகி
அல்லது
ரஸாயனக்கள்வன்

அழகே ஓர் உருவாய் அமைந்த நான்கு ஆப்டோான் படங்கள் அடங்கியது. விலை அணா 12

இப்படத்தின் வரலாறு:—துப்பறியும் சிங்கமான கஜபதி மர்மமுகியை அரஸ்டு செய்ய எத்தனிக்கும் சமயம் மர்மமுகி யேஜையிலுள்ள ஆணியை அழுத்தி மாயமாய் மறைவது ஆச்சர்யத்திலும் ஆச்சரியமாயிருக்கும். இதைப்போன்ற பல மர்ம விஷயங்களும், அதற்கு தகுந்தாப்போல் 3 படங்களும் உண்டு. கொஞ்சம் காப்பிகளே கைவசம் உள்ளது சீக்கிரம் ஆர்டர் செய்யவும்.

ஸ்ரீவாணி விலாச புஸ்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

ஸ்ரீ ஷண்முகா பிரஸ், திருப்பாபுலியூர்